# யூனியன் வங்கி ஊழியர் சங்கம் (தமிழ்நாடு)

TNBEF- AIUBEA உடன் இணைக்கப்பட்டது
சிங்கப்பூர் பிளாசா, 3வது தளம், 164, லிங்கி செட்டி தெரு, சென்னை -600 001
தொலை பேசி : 044-25358718, 9444058718 மின் அஞ்சல் : ubeutn@gmail.com
Website:www.bankubeutn.in

சுற்றறிக்கை எண்:122:2017 நாள்: 02.05.2017

அன்பார்ந்த தோழர்களே,

- **ஊழியர்கள் மீதான மதிப்பீடு (Appraisal System)**
- **நிர்வாகத்தின் தன்னிச்சையான நடவடிக்கையை நிராகரிப்பீர்**

புதிய ஊழியர்களது பதவி உயர்வு, அவர்களது பயிற்சிக்கான தேவைகளை அறிந்துகொள்ள வழிவகை செய்வதற்காக ஊழியர்கள் மீதான மதிப்பீடு தேவை என்று நிர்வாகம் மத்திய தொழிலுறவுக் கூட்டத்தில் தெரிவித்தது. கடந்த காலத்தில் நடைமுறையில் இருந்து கைவிடப்பட்ட இந்த முறை திரும்பக் கொண்டு வரப்பட்டால், அது எதிர்விளைவுகளை ஏற்படுத்தும் என்று உணர்ந்த நமது அகில இந்திய அமைப்பு தனது எதிர்ப்பை பதிவு செய்தது.

அகில இந்திய அமைப்பின் எதிர்ப்பை மீறி, நிர்வாகம் தன்னிச்சையாக ஒரு மதிப்பீட்டு முறையை நடைமுறைப்படுத்த முயற்சி மேற்கொண்டுள்ளது. இதனை முழுமையாக நிராகரிக்கும்படி அகில இந்திய அமைப்பு தோழர்களுக்கு அறைகூவல் விடுத்துள்ளது. நமது தோழர்கள் அனைவரும், இந்தச் சுற்றறிக்கையுடன் இணைக்கப்பட்டுள்ள கடிதத்தை பூர்த்தி செய்து கிளை மேலாளரிடம் கொடுக்குபடி கேட்டுக்கொள்கிறோம்.

**பணிவரன்முறைகள் குறித்த பயிற்சி வகுப்பு :**

ஊழியர்கள் தங்களது உரிமைகள், கடமைகள், பொறுப்புக்கள், ஆற்ற வேண்டிய பணி ஆகியவை குறித்து நமது சங்கம் தொடர்ந்து பயிற்சி வகுப்புக்களை நடத்தி வருகிறது. இந்த ஆண்டின் முதல் பயிற்சி வகுப்பு கீழ்க்கண்டபடி நடைபெறவுள்ளது :

இடம் : ஹோட்டல் ஸ்ரீபாலகிருஷ்ணா, ATC - மத்திய பேருந்து நிலையம் எதிரில், சேலம் - 636 004

நாள் : 21.05.2017 - ஞாயிற்றுக்கிழமை

நேரம் : காலை 10 மணி முதல் மாலை 5 மணி வரை

சேலம் பிராந்தியத்தைச் சார்ந்த புதிய தோழர்களும், மதுரை - கோவை பிராந்தியங்களில் சேலத்திற்கு அருகில் உள்ள கிளைகளைச் சார்ந்த புதிய தோழர்களும், ஆர்வமுள்ள பழைய தோழர், தோழியரும் கலந்து கொள்ளலாம்.

மதிய உணவு, புத்தகம், எழுதுபொருட்கள் சங்கத்தால் வழங்கப்படும். வெளியூரிலிருந்து வரும் தோழர்களுக்கு போக்குவரத்து செலவு வழங்கப்படும். விருப்பமுள்ள தோழர்களும், தோழியர்களும், கீழ்க்கண்ட தோழர்களிடம் தங்களது பெயரை பதிவு செய்துகொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம் :

**தோழர். P.பிரகாசம், தலைவர் : 9865375057**

**தோழர்.M.கலைமாமணி, துணைச்செயலாளர் : 9840735037**

தோழமை வாழ்த்துக்களுடன்,

**(அ.சிதம்பரம்)**
**பொதுச் செயலாளர்**

## இரங்கல்

நமது வங்கியின் சென்னை கிண்டி சிறுதொழில் கிளையில் காசாளராகப் பணியாற்றி வந்த தோழர்.**V.ரவி** அவர்கள் கடந்த 26.04.2017 அன்று உடல் நலக் குறைவின் காரணமாக காலமானார் என்ற தகவலை மிகுந்த வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறோம். தோழர்.**V.ரவி** அவர்கள் நமது சங்கத்தின் செயற்குழு உறுப்பினராக செயல்பட்டுவந்துள்ளது குறிப்பிடத்தக்கது. அவரது பிரிவால் வாடும் அவரது குடும்பத்தாருக்கு நமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறோம்.